ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1832/22 - 2013 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17

*1832/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்புக்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன ஆகிய நான், நிதி விடயம் தொடர்பான அமைச்சின் அமைச்சருடன் கலந்துரையாடி இந்த அறிவிப்பின் மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன் -*

*(1) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் சுதந்திர துறைமுகப் பிரதேசத்தில் சுத்திகரிக்கப்படாத சீனியை இறக்குமதி செய்து சுத்திகரித்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யவும் ஏற்றுமதி செய்வதற்காகவுமான சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவும் கருத்திட்டத்தை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காகச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங்கண்டு அது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தகவல் அடங்கிய அறிவித்தல் 2013, ஏப்பிறல் 2 ஆந் திகதி 1804/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது ;*

*(2) தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை துறைமுகததின் சுதந்திர துறைமுகப் பிரதேசத்தில் சுத்திகரிக்கப்படாத சீனியை இறக்குமதி செய்து சுத்திகரித்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யவும் ஏற்றுமதி செய்வதற்காகவுமான சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவும் கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என பிரகடனப்படுத்துவதற்காக 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது ;*

*(3) "தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் சுதந்திர துறைமுகப் பிரதேசத்தில் சுத்திகரிக்கப்படாத சீனியை இறக்குமதி செய்து சுத்திகரித்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யவும் ஏற்றுமதி செய்வதற்காகவுமுள்ள சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவும் கருத்திட்டம்" என மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் அழைக்கப்பட்டுப் பிரசித்திப்படுத்தப்படுவதோடு கருத்திட்டக் கம்பனி லங்கா சுகர் ரி பைனரி கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்டாகும் ;*

*(4) மேற்கூறிய "தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் சுதந்திர துறைமுகப் பிரதேசத்தில் சுத்திகரிக்கப்படாத சீனியை இறக்குமதி செய்து சுத்திகரித்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யவும் ஏற்றுமதி செய்வதற்காகவுமான சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவும் கருத்திட்டம்" அதன் வர்த்தக நடவடிக்கைகளை 2013, பெப்புருவரி 7 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபையுடன் கருத்திட்ட ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட திகதியில் இருந்து ஏழு (07) வருடங்களுக்குள் மேற்கொள்ள வேண்டும் ;*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(5) மேலும் ;

(i) கருத்திட்டத்தின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட சீனி இருப்பை உள்நாட்டுச் சந்தைக்கு விடுவிக்கையில் சீனி இறக்குமதி தொடர்பில் நடைமுறையிலுள்ள பொருத்தமான வரிவிதிப்பனவுகள் அவ்வாறான இருப்புக்கு பிரயோகமாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) சுத்திகரிக்கப்படாத சீனி இறக்குமதி, சுத்திகரித்த சீனியை ஏற்றுமதி செய்தல் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் சுத்திகரிக்கப்பட்ட சீனி இருப்பை விடுவித்தல் போன்ற கம்பனியின் வியாபார செயற்பாடுகளை கண்காணிக்க ஒழுங்குபடுத்தும் பொறிமுறை ஒன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(6) இக்கட்டளையின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களிலிருந்தான விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகும் என்பதோடு, இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலவரைறைக்குள் அவை அமுலிலும் இருக்கும்.

**அட்டவணை**

1. 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம்

கருத்திட்டக் கம்பனியானது வரி விதிக்கத்தகு இலாபத்தை அடைகின்ற முதலாவது ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை நடவடிக்கைகளை ஆரம்பித்து இரண்டு (2) வருடங்களின் பின்னர், ஆகிய இரண்டில் எக்காலப்பகுதி முன்னர் வருகின்றதோ, அந்த ஆண்டு தொடக்கம் பத்து (10) வருடங்கள் எனும் காலப்பகுதியொன்றுக்கு நிறுவக வருமான வரி விலக்களிப்பு உண்ணாரட்டரசிறைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும். இது தொடர்பாக எழக்கூடிய சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, மேற்படி பத்து (10) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததும், அக்காலப்பகுதியில் நிலவுகின்ற ஏற்றுமதிக்குப் பிரயோகிக்கத்தகு பொதுவான வரி விதிப்பானது கருத்திட்டத்தை அமுல்படுத்தும் கருத்திட்டக் கம்பனி தொடர்பில் ஏற்புடையதாகவிருக்க வேண்டுமென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மூலதனச் செலவுக்காகப் பெற்ற வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் நியமிக்கப்பட்ட உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்படும் தொழில்நுட்பக் கட்டணங்கள் ஆகியன தொடர்பில் கருத்திட்டக் கம்பனிக்கு தடுத்து வைக்கும் வரி விலக்களிக்கப்படும்.

இலாபங்களிலிருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்களுக்கு மேற்கூறப்பட்ட பத்து (10) வருட வரி வரி விலக்களிப்புக் காலத்திற்கும் அதன் பின்னரான ஒரு (01) வருடத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

கருத்திட்டக் கம்பனியின் ஆகக் கூடியது இருபது (20) வெளிநாட்டு ஊழியர்களுக்கான உழைக்கும் போது செலுத்தும் வரியானது ( PAYE tax) கம்பனியின் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பித்த தினத்திலிருந்து ஐந்து (05) வருட காலமொன்றுக்கு விலக்களிக்கப்படும் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பித்ததன் பின்னரான ஐந்து வருடங்களையடுத்து மேற்படி விலக்களிப்பு நிறுத்தப்படுவதனால், வெளிநாட்டு ஊழியர்களை சிறந்த திறமையடிப்படையிலான உன்நாட்டு ஊழியர்களைக் கொண்டு பதிலீடு செய்யுமாறு கருத்திட்டக் கம்பனியானது தேவைப்படுத்தப்படுகின்றது.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம்

கருத்திட்ட அமுலாக்கல் காலமான ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதியின்போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடையதாகாது.

(இ) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்

கருத்திட்ட அமுலாக்கல் காலமான ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதியின்போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடையதாகாது.

(ஈ) *2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்*

கருத்திட்ட அமுலாக்கல் காலமான ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதியின்போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடையதாகாது.

(உ) *சுங்கக் கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயம்)*

(i) எதிர்மறைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டத்தின் தேவைக்காக மாத்திரம் கருத்திட்டத்தை அமுல்படுத்துகின்ற கருத்திட்டக் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து மூலதனப் பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்திலிருந்தான விலக்களிப்பானது ஏற்புடையதாகும். ஆயினும் எதிர்மறைப் பட்டியலிலுள்ள பொருட்கள் இலங்கையில் முழுமையாக தயாரிக்கப்படாதவையாக அல்லது கருத்திட்டத்தின் நிறைவுக் காலப்பகுதியினுள் போதுமான தரத்தில் போதுமான எண்ணிக்கையில் பெற முடியாவிடின் அவற்றுக்கும் சுங்கக் கட்டணத்திலிருந்தான விலக்களிப்பு ஏற்புடையதாகும்.

(ii) கருத்திட்டத்திற்கு தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களின் அனைத்து இறக்குமதிகள்/ உள்நாட்டுக் கொள்வனவுகளும் சுங்கக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும். ஆயின் அத்தகைய பொருட்கள் கருத்திட்டக் கம்பனியின் பெயரில் அனுப்பப்படல் வேண்டுமென்பதோடு கருத்திட்ட அமுலாக்கல் நோக்கத்திற்காகவும் இறக்குமதி செய்யப்படலும் வேண்டும். அவ்வாறு ஏற்புடையதெனக் கருதப்படும் பட்சத்தில் இவ்விரு நிபந்தனைகளினதும் பூரணத்துவம் சபையினால் பரிசீலிக்கப்படும். மற்றும் கருத்திட்டக் கம்பனியிலுள்ள எந்தவொரு நபரினதும் தனிப்பட்ட மற்றும் அவரின் பிரத்தியேக பாவனைக்காக கருத்திட்டக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்படுகின்ற எந்தவொரு தனிப்பட்ட பொருட்களுக்கும் இவ்விலக்களிப்பானது ஏற்புடையதாகாது என்பதோடு இவ்வொப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும் இறக்குமதிகளை தானாகவோ அல்லது அதன் அனுமதியின் பேரிலோ பரிசோதிப்பதற்கான உரிமையை சபை தன்வசம் கொண்டுள்ளது.

2. *2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டம்*

*2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டம் மூலம் திருத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவுகள் 18அ மற்றும் 18இ (வர்த்தகமைய செயற்பாட்டின் ஒழுங்குவிதிகளின் பகுதி IV)*

(அ) வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டமும் (423 ஆம் அத்தியாயம்) ஒழுங்குவிதிகளும்

வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் I, I அ, II, III, IV, V மற்றும் VI ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் கருத்திட்டக் கம்பனியின் கருத்திட்டத்திற்கு அல்லது கருத்திட்டம் தொடர்பிலான விடயங்களுக்கு ஏற்புடையதாகாது.

(ஆ) *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்*

சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் தொடர்பான கருத்திட்டத்தின் தேவைக்கான சகல இறக்குமதிகளும் சுங்கக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டுமென்பதோடு, கருத்திட்ட அமுலாக்கல் காலமான ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதியின்போது திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் அப்பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டுகளிலிருந்து விடுதலை வழங்கப்படவும் வேண்டும்.

(இ) *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரம் பண்ட அறவீட்டுச் சட்டம்*

இறக்குமதி செய்யப்படும் இடத்தில் மூலப்பொருட்களின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படல் வேண்டும்.

லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா. உ.,
முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சர்.

முதலீட்டு ஊக்குவிப்புக்கள் அமைச்சு,
கொழும்பு,
2013, ஒற்றோபர் 15.

11- 104

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.